அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:- 01/2000

எனது இல:- E/VIII/04/S.L.T.S
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
1999. டிசெம்பர் 10.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்.

**1977.05.01 முதல் 1994.06.30 வரை செயல்வலுவுடனிருந்த மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு III இனம் II வகுப்பு இனம் உள்ள ஊழியர் கோப்புக்களை இணைந்த ஊழியர் கோப்பு எனும் அடிப்படையில் தொடர்தல்.**

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பிரமாணக் குறிப்பானது 1974.07.01 ஆந் திகதியன்று முதல் செயற்பாட்டுக்கு வருமுன், மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவையின் பிரமாணக் குறிப்பானது 1977.05.01 ஆந் திகதியன்று முதல் பயன்பாட்டுக்கு வந்ததால் அச் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள், அச் சேவையின் வகுப்பு II 'ஆ' யின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் வெற்றிடங்கள் இல்லாதிருந்தமை காரணமாக, பதவியுயர்வுகள் பெறுவதற்கு நீண்டகாலம் அச்சேவையின் வகுப்பு III இல் தேங்கி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

02. மேற்போன்ற காரணங்களின் நிமித்தம் பதவியுயர்வுகள் பெறுவதற்கான வாய்ப்புக்களை இழந்த அச் சேவையைச் சேர்ந்த அலுவலர்களைப் பொறுத்தவரை, 1977.05.01 ஆந் திகதியன்று முதல் மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு III இற்கும், வகுப்பு II இன் பிரிவு 'ஆ' விற்கும் இடையில் இருந்த விகிதாசார முறையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே, 1977.05.01 முதல் 1994.06.30 வரையான காலப்பகுதியினுள், தாபனப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஊழியர் கோப்புக்களுக்கிடையில் உள்ள விகிதாசாரத்தைப் பொருட்படுத்தாது, தகைமையுடையவர்களாகவிருந்த அலுவலர்களுக்கு, சம்பள நிலுவை கொடுக்கப்படாதவாறு, பதவியுயர்வுகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

03. மத்திய மட்ட தொழில்நுட்பச்சேவை பற்றி 1994.07.01 ஆம் தேதிவரை செயலாட்சியிலிருந்த அரசாங்க நிர்வாக, தாபன சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள், இத் திருத்தத்திற்கமைய, செயற்படுத்தப்படல் வேண்டும்.

04. இவ் ஏற்பாடுகளால் உள்ளடக்கப்படக்கூடிய மூன்று தொகுதி அரசாங்க அலுவலர்கள் உளர்.

1. மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவையில் இருந்த 1994.07.01 ஆம் திகதிக்கு முன் இளைப்பாறிய அலுவலர்கள்.

11. 1994.07.01 ஆம் திகதியன்று இலங்கை தொழில் நுட்பவியற் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டதன் பின் 1999.12.24 வரையில் இளைப்பாறிய அலுவலர்கள்.

111. 1994.07.01 இல் இலங்கை தொழில் நுட்பவியற் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு 1999.12.24 வரை சேவையில் இருந்த அலுவலர்கள்.

05. இதற்கமைய, மேற்போன்ற தொகுதி I , தொகுதி II ஆகியவற்றிலுள்ள அலுவலர்களின் ஓய்வூதியங்களானவை மீளாய்வு செய்யப்படல் வேண்டுமென்பதுடன், மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியம் 1999.12.24 முதல் நிலுவைகள் எதுவும் வழங்கப்படாமல், கொடுபடல் வேண்டும்.

06. தொகுதி III இல் உள்ள அலுவலர்களின் சம்பளங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என்பதுடன், மீளாய்வு செய்யப்பட்ட சம்பளம் 1999.12.24 முதல், நிலுவை எதுவும் வழங்கப்படாது, கொடுக்கப்படலும் வேண்டும்.

07. மேற்போன்ற அலுவலர்கள் இப் பதவியுயர்வுகள் காரணமாக, முன்னோக்கிய காலத்தையும் அல்லது வேறேதேனும் சேவைச் சிறப்புரிமைகளுக்கோ சலுகைகளுக்கோ உரித்துடையவராகமாட்டார்.

08. இச்சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒப்புதலுடன் விடுக்கப்பட்டுள்ளது.

(பு. கி. ஜயசிங்க),
பதில் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

நர/-